
# கதை கதையாம் காரணமாம்





தமிழ் ஐயா வெளியீட்டகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

60. நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றக் கதை
(தாத்தா சாமி) அ. வசந்த் 315

61. தெனாலிராமன் கதைகள்
ஆ. நாகமணி 319

62. தமிழில் வரலாற்றுக் கதைகள் பஞ்சதந்திரம் கதைகள்
ஓர் ஆய்வு ப. அருள்மணி 325

63. தெனாலிராமன் கதைகள்
முனைவர் ஆர்.ஆர்.கோவிந்தராசன் 329

64. காத்தவராயன் கதைப்பாடலில் காணப்படும்
சமூகநிலை க. ரெசினா 335

65. தேசிங்குராசா
கே. சிவக்குமார் 340

66. நாட்டுப்புறத் தெய்வங்களின் தோற்றம் கதைகள்
முனைவர் மா. சுசாதா 346

67. வாய்மொழிக் கதைகளில் கையூட்டு
முனைவர் ஆறு. இராமநாதன் 350

68. பழமொழியில் பழங்கதைகள்
முனைவர் சு. சதீசுகுமார் 354

69. பகவதிகள் கோயில் கொண்ட கதை பாலக்காடு
மாவட்டம் நா. தீபா 360

70. படகர் இன மக்களின் குலதெய்வ வழிபாட்டில்
கதைகள் ஆ. சோபனா குமாரி 364

71. தம்பிமார் கதைப்பாடலும் இலக்கிய நாயகங்களும்
முனைவர் ம.மேயல் எடல்குயின் 369

72. நாட்டுப்புறக் கதைக ஓர் ஆய்வு மீள் வாசிப்பில்
தெருக்கூத்து முனைவர் வி.உமாமகேசுவரி 374

73. பழமொழிகளில் விடுகதைகளில் பின்னணியில்
சிறுகதைகள் எசு. கனிமொழி 379

# 68. பழமொழியில் பழங்கதைகள்




முனைவர் சு. சதீசுகுமார்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்


## முன்னுரை

கதைக் கூறும் வழக்கம் தமிழ் மக்களிடையே காலங்காலமாக நிலைபெற்று வந்துள்ளது. நாட்டுப்புற இலக்கியங்களிலும் கதைக்கெனத் தனியிடம் உண்டு. மக்களிடையே பரவலாக வழங்கி வந்த ஒரு கதை காலப்போக்கில் கைதேர்ந்த புலவரால் கவின்மிகு இலக்கியமாகபங புனையப்படுகின்றது. பழையவாகிய கதைப் பொருளைத் தழுவி இயற்றப்படும் நூலைத் தொன்மை என்னும் வனப்பினுள் அடக்கித் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய முன்றுறையரையனரால் இயற்றப்பட்ட பழமொழியில் இடம்பெற்றுள்ள பழங்கதைகளை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## கோவர்த்தன மலையைக் கண்ணன் குடையாகப் பிடித்த கதை

திருமால் காத்தல் தொழிற்குரியவர். அக்காத்தல் தொழில் கண்ணன் அவதாரத்தில் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது. ஆயர்பாடியில் வாழ்ந்த மக்களுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அவர்களை அத்துன்பத்திலிருந்து கண்ணன் காப்பாற்றினான். ஆயர்பாடியில் இருந்த கோவலர் இந்திரனுக்கு விழா எடுத்து பொங்கலிட்டு வழிபட்டு வந்தனர். கண்ணன் இதை தடுத்தான். இதனால் சினங்கொண்ட இந்திரன் கல்மழை பெய்வித்தான். கல்மழையால் கோவலரும், ஆநிரைகளும் துன்பம் அடைவதைக் கண்ட கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்திக் காத்தான். ஆக்களைத் துன்பத்தினின்று காத்தல் சிறந்த அறம் என்பதை உணராத உலகோர், கண்ணனை ஆநிரைகளுக்குத் தக்க இடையன் என்று கூறுவர். நல்லொழுக்கம் இல்லாதவர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் பழித்துரைப்பர் என்ற செய்தியை,